னார்கள். பிறகு அதை 1985-லே மறு ஆய்வு செய்து 23 இலட்சம் ஆகும் என்று மறு மதிப்பீட்டையும் தயாரித்தார்கள். அதன் பின்னால், தலைமைப் பொறியாளர் அவர்களால் 18-10-1988-ல் ரூ. 13.20 இலட்சம் என உறுதி செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே இந்த வேறுபாடு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுவதைப்போல முதலில் 12 இலட்சம் ரூபாய்க்குத் தயாரிக்கப்பட்ட இந்த மதிப்பீடு, 23 இலட்சம் ரூபாய்க்கு மறு மதிப்பீடு செய்யப்பட்டு, பிறகு அது 12 இலட்சம் ரூபாய்க்குக் கீழே வந்திருக்கிறது. இதிலே பொறியாளர்கள் எந்த அடிப்படையிலே இந்த வித்தியாசமான திட்ட மதிப்பீடுகளைத் தயாரித்தார்கள் என்று புலப்படவில்லை. இருந்தாலும் பொதுப்பணித் துறையில், நெடுஞ்சாலைத் துறைக்குப் பொறுப்பு வகிக்கிற நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் இதைக் கவனத்தில் எடுத்துக்கொண்டு, இதைப்போன்ற காலதாமதத்திற்கு இவைகளும் ஒரு காரணமாக இருப்பது தவிர்க்கப்பட நடவடிக்கை எடுப்பார்கள் என்று கருதுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தக் கருத்துக்களின் அடிப்படையில் இந்தத் திட்டத்திற்கு இப்படி மாறி மாறி மதிப்பீடு தயாரிக்கப்பட்டதற்கு என்ன காரணம் என்பதைக் கேட்டறிந்து, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### சைதாப்பேட்டையில் விளையாட்டுத் திடல்கள்.

233—(*வினா எண். 3496) திரு. ஆர் எஸ். ஸ்ரீதர் : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சைதாப்பேட்டையில் விளையாட்டுத் திடல்கள் அமைக்கும் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சி சைதாப்பேட்டை வட்டம் கோட்டூர்புரத்தில் அமைந்துள்ள விஞ்ஞானத் தொழில் நுட்ப மையத்தின் கட்டுப்பாட்டில் தற்போது காலியாக உள்ள 3.60 ஏக்கர் நிலத்தைப் பெற்று, அவ்விடத்தில் பேருந்து தடச்சாலை அமைக்கும் திட்டமும், மேலும் விளையாட்டுத் திடல் அமைக்கும் திட்டமும் சென்னை மாநகராட்சியின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ஆர். எஸ். ஸ்ரீதர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுத்ததற்கு

நான் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இதைப் போலவே மாண்புமிகு கலைஞர் அவர்களுடைய கடந்த ஆட்சி காலத்தில் சைதாப்பேட்டையில் 33 கிரவுண்ட் நிலம், விளையாட்டுத் திடல் அமைக்க, கையகப்படுத்தக் கூடிய நிலைமை உருவாக்கப்பட்டது. மீண்டும் அந்த இடத்தை எடுத்து, விளையாட்டுத் திடல்அமைக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா என்றுஅறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சி, சைதாப்பேட்டை வட்டம் கோட்டூர்புரத்தில் தமிழ்நாடு விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்ப மையம் அமைந்திருக்கிறது. தற்போது அந்த மையத்தின் கட்டுப்பாட்டில் இருக்கிற நிலப் பகுதி முன்பு கோட்டூர்புரம் மக்களால் சமுதாயக் காரியங்களுக்குப் பயன்படுத்தப்பட்டு வந்தது. அந்த இடத்திலே தான்—கோட்டூர்புரத்திலிருந்து அடையாறு செல்லக்கூடிய மக்களுக்கு, பாதையை விரிவுபடுத்துவதற்கு இடம் இல்லை.—அதைத் தான் தமிழ்நாடு விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்ப மையத்திடமிருந்து பெற்று, ஏற்கெனவே அந்த நிலம் அவர்களுக்கு ஒப்படைக்கப்பட்டிருப்பதால், பாதை அமைத்துக் கொள்வதற்கும், டென்னிஸ் அரங்கம், வாலி பால் திடல், ஹாக்கித் திடல் இவைகளை உருவாக்குவதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். என்னையும் அந்த இடத்திற்கு அழைத்துச் சென்று காட்டினார்கள். மாநகராட்சி மூலம் அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள். அதன் பேரில் நம்முடைய கல்வி அமைச்சர் அவர்களும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் வேண்டுகோளை ஏற்று, அந்த இடத்திலே போக்குவரத்துச் சாலை அமைக்கவும், விளையாட்டுத் திடல் அமைக்கவும் நிலம் ஒதுக்கிக் கொடுப்பதற்குப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் வேண்டுகோள் நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா நேரத்தில் குற்றச்சாட்டுக் கூடாது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வினாவில் வருகின்ற குற்றச்சாட்டுப் பகுதி அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

1989 மே 6]

திரு. ஆர். எஸ். ஸ்ரீதர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சைதாப்பேட்டையில் மாநகராட்சிக்குச் சொந்தமான 33 கிரவுண்ட் நிலம் கையகப்படுத்தப்பட்டு, அதிலே விளையாட்டுத் திடல் அமைப்பதற்கு பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர் திரு. ஆறுமுகம் அவர்கள் நீண்ட நாள் போராடினார்கள். தற்போது அவர்கள் இறந்துவிட்டார்கள். அவர்கள் இறக்கின்ற நேரத்தில் ஒரு வேண்டுகோள் விடுத்தார்கள்.—' நான் மாண்புமிகு கலைஞர் அவர்களுக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் பாடுபடுகிற ஒரு தொண்டனாக இருந்து இறக்கிறேன். கலைஞர் ஆட்சி வந்த பின்னால் அந்த இடத்தைக் கையகப்படுத்தி, என் பெயரால் அந்த விளையாட்டுத் திடலை அமைக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்த மன்றத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி அல்ல ; கேட்டுக் கொள்கிறார்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே விவரமாகப் பதில் சொல்லியிருக்கிறேன்.

திரு. மு. க. ஸ்டாலின் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரில் உள்ள பல்வேறு மாநகராட்சி விளையாட்டுத் திடல்கள் கேட்பாரற்று, கவனிக்கப்படாமல் இருக்கின்றன என்பதை அரசு அறியுமா ? ஆம் எனில் அரசு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-50)

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சி விளையாட்டுத் திடல், பூங்கா ஆகியவை கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாகப் பராமரிக்கப்படாமல் இருந்தன. ஆனால் இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்டதும் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஸ்டாலின் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் என்னை அந்தப் பகுதிக்கு அழைத்துச் சென்று காட்டியிருக்கிறார்கள். அதன் பேரில் மாநகராட்சி ஆணையாளருக்கும், தனி அலுவலருக்கும் தகுந்த அறிவுரைகள் வழங்கப்பட்டு இப்போது பூங்காக்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. பராமரிக்கப்படாமல் இருந்த விளையாட்டுத் திடல்கள் உடனடியாகப் பராமரிக்கப்பட வேண்டும் என்றும் நல்ல திடலாக உருவாக்கப்பட வேண்டும் என்றும் கூறி, இப்போது நடவடிக்கை எடுத்து வருகிறோம்.